**DEPOSITION OF WITNESS**
**(In the Court of the Subordinate Judge, Sankarankovil )**
**OS.No. 212 /2022**
********

| | |
|---|---|
| **Deposition of Witness for** | **: PW1** |
| **Name** | **: குருசாமி** |
| **Father`s Name** | **:** |
| **Village** | **:** |
| **Taluk** | **:** |
| **Calling** | **:** |
| **Religion** | **:** |
| **Age** | **:** |
| **Date** | **: 06.02.2026** |

**Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.**

**முதல் விசாரணை**

**I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு முதலாவது சாட்சி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிிமயமாக்கப்பட்டது, முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையெழுத்திட்டுள்ளேன். பிராது தபசில் சொத்தைப் பொறுத்து வாதிக்கு திருவேங்கடம் தாசில்தார் அலுவலகத்தில் வழங்கிய நத்தம் நிலவரித் திட்ட துாய சிட்டா, அசல் பட்டா எண். 1060 **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.05.2022 ல் வாதி தன் வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் போஸ்டல் ரசீதுடன் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி வாங்க மறுத்ததால் திரும்ப வந்த கவருடன் கூடிய தபால் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராது தபசில் சொத்தைப் பொறுத்து தீர்வை ரசீது எண்ணம் – 1 **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தானது அரசு புறம்போக்கு என்பதால் குறியீடு செய்ய ஆட்சேபணை செய்யப்படுகிறது. அதனைத் தொடர்ந்த வா.சா.ஆ,4 வது ஆவணத்தை

குறியீடு செய்ய ஆட்சேபணை செய்யப்படுகிறது. ஆட்சேபணைக்குட்பட்டு ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது.)

முதல் விசாரணையின் தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/- P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.